1986 நவம்பர் 14]

தமிழகத்தில் வருங்காலத்தில், ஏறக்குறைய 7-வது ஐந்தாண்டு திட்டக்காலம் முடிவடைவதற்குள் ஒரு லட்சம் ஏக்கரில் பட்டு விவசாயம் செய்ய வேண்டும், முசுக்கொட்டைச் செடியைப் பயிரிட வேண்டும் என்று ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். அந்த நேரத்திலே நிச்சயமாக அந்தப் பண்ணையை விரிவாக்கம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. ஆகவே, அவசியம் ஏற்படுகிறபோது நிச்சயமாக எந்த அளவிற்கு விரிவாக்க வேண்டுமோ அந்த அளவிற்கு விரிவாக்குகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

புதுக்கோட்டை மாவட்டம் கரம்பக்குடியில் பாலிதின் பை உற்பத்தி கூட்டுறவுச் சங்கம்.

16—(*வினா எண்.8141)—திரு. அ. வெங்கடாசலம்: மாண்புமிகு ஊரகத் தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, கரம்பக்குடியில் பாலிதின் பை உற்பத்தி செய்யும் தொழில் கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே—(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. அ. வெங்கடாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், இன்றைக்கு இருக்கிற மாவட்டங்களிலேயே மிகவும் சாதாரண நிலையில் உள்ள பின் தங்கிய மாவட்டம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அத்தகைய மாவட்டத்தில் என்னுடைய தொகுதியாகிய கரம்பக்குடி பகுதி மிகவும் பின் தங்கிய பகுதியாக இருக்கிற கால கட்டத்தில், குறிப்பாக புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தொகுதியில், எந்த ஒரு தொழிற்சாலையும் இல்லாத நிலையில், அந்தக் கரம்பக்குடி பகுதியில் உள்ள படித்தவர்களுக்கும், சாதாரண மக்களுக்கும் வேலை கிடைக்கக் கூடிய அளவிற்கு, பாலிதின் பை

உற்பத்தி செய்யக் கூடிய தொழில் கூட்டுறவுச் சங்கத்தை அமைப்பதற்கு நம்முடைய அரசு முனைந்து நடவடிக்கை எடுக்கிறபோது, இந்தத் தொகுதிக்கு முன் உரிமை கொடுக்கப்படுமா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்: தலைவர் அவர்களே, தாட்கோ நிதியுதவியோடு ஒரு சங்கத்தை அமைத்து அங்கே பாலிதின் பைகளைத் தயாரிக்க வேண்டுமென்று சொல்லி அசிஸ்டெண்ட் டைரக்டர் அவர்கள் இயக்குநருக்கு ஒரு செயற் குறிப்பை அனுப்பினார். இப்போது இருக்கிற நிலைமையில் பாலிதின் பைகள் உற்பத்தி செய்யக் கூடிய தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஏறக்குறைய 16, தமிழ் நாட்டில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த 16 சங்கங்களுக்கும் குறிப்பிட்ட அளவிற்குத்தான் ஆர்டர்கள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. அதிகப்படியான ஆர்டர்கள் கிடைக்கவில்லை. தற்போது அதே தாட்கோ நிதியுதவியோடு திருச்சி மாவட்டத்திலும், தென்னாற்காடு மாவட்டத்திலும் பாலிதீன் பைகளைத் தயாரிக்கிற தொழிற்சாலைகளை ஏற்படுத்த வேண்டுமென்ற செயற் குறிப்பு நடைமுறையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே 16 இடங்களுக்கு அதிகமான வழங்கல் ஆணை அதாவது ஆர்டர்கள் கிடைக்கவில்லை. கூடுதலாகக் கிடைக்கிறபோது நிச்சயமாக கரம்பக்குடியில் புதிய சங்கம் அமைத்து அவற்றை உற்பத்தி செய்வதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோமுகி அணை மலைவாசி அரசினர் உயர்நிலைப் பள்ளி.

17—(*வினா எண். 3994)-திரு. சோ. கலிதீர்த்தான்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோமுகி அணையிலுள்ள மலைவாசி அரசினர் உயர் நிலைப் பள்ளியை மேல் நிலைப் பள்ளியாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு தலைவர் அவர்களே—(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.